மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சாதாரண பேருந்தாக இருந்தால் நிச்சயமாக அங்கேயும் நின்றுதான் போகும். விரைவுப் பேருந்தாக இருப்பதால் அங்கே நின்றுபோவது சரியல்ல என்று கருதுகிறார்கள்.

*327 வினா—**திரு. நா. வெ. குருசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து கூடலூர் செல்லும் பாண்டியன் போக்கு வரத்து துரித வண்டி ஆண்டிப்பட்டியில் நின்று செல்லச் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, மதுரையிலிருந்து கூடலூர் செல்லும் விரைவுப் பேருந்து ஆண்டிப்பட்டியில் நிற்பது இல்லை. ஆகவே, எங்களைப் போன்றவர்கள் ஆண்டிப்பட்டியில் இறங்க முடியாமல் போகிறது. அங்கே டிக்கட்டுகள் போட்டுக் கொடுக்கப்படுவதில்லை என்றாலும், விரைவுப் பேருந்துகள் நின்று போவதற்காவது வசதி செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு பேருந்துத் துறையின் சார்பில் மதுரையிலிருந்து கூடலூருக்கு விரைவுப் பேருந்து விடப்படவில்லை. அந்த பஸ்கள் பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்தைச் சேர்ந்தவை. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

ஆரம்பாக்கத்திலுள்ள சோப்புத் தொழிற்சாலை

*328 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் நடைபெறும் கதர் கிராமத் தொழில் வாரிய சோப்புத் தொழிற் சாலையை மேலும் விரிவுபடுத்தி வேலைவாய்ப்பும் வருவாயும் பெருக்கும் திட்டம் உண்டா ?

1973 நவம்பர் 22]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த சோப்புத் தொழிற்சாலை லாபத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் அதை விரிவுபடுத்தினால், அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும். ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து விரிவு படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உற்பத்தி ஆகின்ற பொருட்களை பாதுகாக்கவும், சரியான போக்குவரத்திற்கும் போதுமான வசதி இல்லாததினால் மேற்கொண்டு விரிவுபடுத்த முடியாது என்று சொல்லி யிருக்கிறார்கள். இருந்தாலும், இதுபற்றி மறுபரிசீலனை செய்யலாம்.

சென்னை சட்டக் கல்லூரி விடுதி

* 299 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுதுள்ள சென்னை சட்டக் கல்லூரி விடுதிக் கட்டடத்தையும், இடத்தையும் அரசு விலைக்கு வாங்கி, விடுதியை விரிவுபடுத்தும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

(இ) தற்போதுள்ள விடுதியில், இட நெருக்கடியைத் தவிர்க்க அரசு அவசரமாகக் கவனிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தற்போதுள்ள சென்னை சட்டக் கல்லூரி விடுதிக் கட்டிடத்தையும், இடத்தையும் அரசு விலைக்கு வாங்கி கட்டிடத்தை பழுது பார்த்து வருகிறது. கூடுதல் விடுதிக் கட்டிடம் ரூ. 12 லட்சம் செலவில் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டிட வேலை துவக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கூடுதல் விடுதிக் கட்டிட வேலை எங்கு ஆரம்பிக்கப் போகிறார்கள் ? எப்போது முடியும் என்று தெரிவிக்க முடியுமா ?